www.Padasalai.Net www.TrbTnpsc.com

Ts8T

**தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்**
**முழுஆண்டுத் தேர்வு - ஏப்ரல் 2023**

12-04-2023

**வகுப்பு 8**
**தமிழ்**

நேரம் : 2.30 மணி மதிப்பெண்கள்: 100

**பகுதி - அ**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **10×1=10**

1) மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ............
அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

2) வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ............
அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து இ) சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து

3) செவ்விந்தியர்கள் நிலத்தைத் .............. மதிக்கின்றனர்
அ) தாயாக ஆ) தந்தையாக
இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

4) இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் ............
அ) இராதாகிருட்டிணன் ஆ) அம்பேத்கர்
இ) நௌரோஜி ஈ) ஜவஹர்லால் நேரு

5) மக்களின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது ...........
அ) வானம் ஆ) கடல் இ) மழை ஈ) கதிரவன்

6) எம்.ஜி.ஆருக்கு அழியாத புகழை தேடித்தந்த திட்டம் ..........
அ) மதிய உணவுத்திட்டம் ஆ) வீட்டு வசதித்திட்டம்
இ) மகளிர் நலன் திட்டம் ஈ) இலவசக்காலணித் திட்டம்

7) உடல்நலம் என்பது .......... இல்லாமல் வாழ்தல் ஆகும்.
அ) அணி ஆ) பணி இ) பிணி ஈ) மணி

8) கற்றவருக்கு அழகு தருவது ..........
அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி

9) சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது ..........
அ) வேற்றுமைத் தொகை ஆ) உம்மைத் தொகை
இ) உவமைத் தொகை ஈ) அன்மொழித்தொகை

10) சேரர்களின் தலைநகரம் ...........
அ) காஞ்சி ஆ) வஞ்சி இ) தொண்டி ஈ) முசிறி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5×1=5**

11) வாழ்விற்குரிய இன்பத்துறைகளில் தலையாயது ............ இன்பம் ஆகும்.
12) பின்னலாடை நகரமாக ............ விளங்குகிறது.
13) விகாரப் புணர்ச்சி ............ வகைப்படும்.
14) ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ...........
15) ஒன்றே ............. என்று கருதி வாழ்வதே மனிதப் பண்பாகும்.

**III. பொருத்துக.** **5×1=5**

16) பெயரெச்சத் தொடர் - கார்குழலி படித்தாள்
17) வினையெச்சத் தொடர் - புலவரே வருக
18) வினைமுற்றுத் தொடர் - பாடி முடித்தான்
19) எழுவாய்த் தொடர் - எழுதிய பாடல்
20) விளித் தொடர் - வென்றான் சோழன்

**IV. குறுகிய விடையளி.** **4×2=8**

21) யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?
22) கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர்?
23) தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
24) அரசன் தண்டிக்கும் முறை யாது?
25) சான்றோர்க்கு அழகாவது எது?

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**V. கீழ்க்கண்ட வினாக்களில் ஏதேனும் நான்கினுக்கு மட்டும் விடையளி. 4×2=8**

26) நோய்கள் பெருகக் காரணம் என்ன?

27) தமிழ்நாட்டின் ஹாலந்து என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?

28) பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?

29) தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு.வி.க கூறுவன யாவை?

30) எம்.ஜி.ஆரின் சமூக நலத் திட்டங்களுள் நான்கனை எழுதுக.

**VI. கீழ்க்கண்ட வினாக்களுள் ஏதேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி. 3×2=6**

31) எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

32) நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?

33) தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

34) இயல்பு புணர்ச்சியை எடுத்துக் காட்டுடன் விளக்குக.

**VII. கீழ்க்கண்ட வினாக்களில் ஏதேனும் நான்கினுக்கு மட்டும் விடையளி 4×4=16**

35) மழைச்சோறு எடுத்தபின் எவ்வாறு மழை பெய்தது?

36) நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

37) வல்லினம் மிகாத் தொடர்கள் ஐந்தனை எழுதுக.

38) அயோத்திதாசரின் இதழ்ப்பணி பற்றி எழுதுக.

39) பிறிது மொழிதல் அணியை விளக்கி எடுத்துக்காட்டுத் தருக.

40) இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?

**VIII. கீழ்க்கண்ட பாடலை அடிபிறழாமல் எழுதுக. 4+2=6**

41) வாழ்க நிரந்தரம் - எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்து பாடலை எழுதுக.

42) தக்கார் - எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**IX. விரிவான விடையளி 2×8=16**

43) பூனா ஒப்பந்தம் பற்றி எழுதுக.

**(அல்லது)**

கொங்குநாட்டின் உள்நாட்டு வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.

44) அறிவுசால் ஔவையார் - என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

**(அல்லது)**

காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**X. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி. 10×1=10**

45) **மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

அ) பூ ........... (கொய் / பறி)

ஆ) பால் .......... (குடி / பருகு)

46) **தொடர்களை மாற்றுக.**

அ) காட்டில் புலி நடமாட்டம் உள்ளது. (வினாத் தொடராக மாற்றுக)

ஆ) அந்தோ! பூனையின் காலில் அடிபட்டு விட்டதே! (செய்தித் தொடராக மாற்றுக)

47) **கலைச்சொல் எழுதுக.**

அ) Disease -

ஆ) Side effect -

48) **பின்வரும் தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.**

அ) திரு.வி.க எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ் பெற்றது.

ஆ) பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்.

49) **இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக.**

அ) மழை நன்கு பெய்தது. எங்களால் விளையாட முடியவில்லை.

ஆ) எனக்குப் பால் வேண்டும். எனக்குப் பழம் வேண்டும்.

**XI.** 50) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக. **10×1=10**

**(அல்லது)**

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டு கடிதம் எழுதுக.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com